சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – ஈரோடு கோட்டம் – திரு. மு.தனுஷ் என்பவர் கருணையடிப்படையில் 09.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (ப) எண்.232**

**நாள்: 25.07.2023**
**சோபகிருது , ஆடி–9,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. ஈரோடு கோட்ட இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகள் ந.க. எண்.3476/2021/அ3, நாள் 03.09.2021.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்–3/3005972/2022, நாள் 29.09.2022.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், திருச்சி வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட, ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ) (புலனாய்வு) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 26.08.2020 அன்று மறைந்த திரு. கா.முரளிதரன் என்பவரின் மனைவி திருமதி.மு.ஜெயந்தி தனது மகன் திரு. மு.தனுஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 03.05.2021 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. மு.தனுஷ் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஈரோடு கோட்ட இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகளின்படி திரு. மு.தனுஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 09.09.2021 முற்பகல் முதல் உதவி ஆணையர் (மா.வ), பெரிய அக்ரஹாரம் சரகம், ஈரோடு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான

09.09.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வணிகவரி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ) (புலனாய்வு) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 26.08.2020 அன்று மறைந்த திரு. கா.முரளிதரன் என்பவரின் மகன் திரு. மு.தனுஷ் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், உதவி ஆணையர் (மா.வ), பெரிய அக்ரஹாரம் சரகம், ஈரோடு அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை தனியர் பணியில் சேர்ந்த நாளான 09.09.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.4210/ட்டி1/2023, நாள் 15.06.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4983525/ஜி1/2023, நாள் 07.07.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

✓திரு. மு.தனுஷ், இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (மா.வ), பெரிய அக்ரஹாரம் சரகம், ஈரோடு.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

நகல்:

இணை ஆணையர் (மா.வ), ஈரோடு கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/8/2023
பிரிவு அலுவலர்

4/8/23